www.tnschools.co.in

**B**

Register Number

**Part III**

# கணிதம் / MATHEMATICS

( New Syllabus )

( Tamil Version )

நேரம் : 3 மணி ] June 2006 [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பிரிவு - அ

*குறிப்பு :* i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் மதிப்பெண் *ஒன்று*.

iii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்வு செய்க. $40 \times 1 = 40$

1. $f(D) = (D-a)\,g(D)$, $g(a) \neq 0$, எனில் வகைக்கெழுச் சமன்பாடு $f(D)_y = e^{ax}$ இன் சிறப்புத் தீர்வு

   அ) $me^{ax}$

   ஆ) $\dfrac{e^{ax}}{g(a)}$

   இ) $g(a)\,e^{ax}$

   ஈ) $\dfrac{xe^{ax}}{g(a)}$.

2. $\sin x\,(dx + dy) = \cos x\,(dx - dy)$ என்ற வகைக்கெழுச் சமன்பாட்டின் வரிசை மற்றும் படி முறையே

   அ) 1, 1 ஆ) 0, 0

   இ) 1, 2 ஈ) 2, 1.

[ Turn over

www.tnschools.co.in

3. $\sim [\, p \wedge (\sim q)\,]$ ன் மெய் அட்டவணையில் நிரைகளின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 4

இ) 6 ஈ) 8.

4. முழுக்களில் $*$ என்ற ஒரு செயலி $a * b = a + b - ab$ என வரையறுக்கப்படுகிறது எனில் $3 * (4 * 5)$ இன் மதிப்பு

அ) 25 ஆ) 15

இ) 10 ஈ) 5.

5. 1–ன் $n$ ஆம் படி மூலங்களின் கணத்தில், பெருக்கலைப் பொருத்த குலத்தில் $\omega^k$ இன் எதிர்மறை $k < n$

அ) $\omega^{\frac{1}{k}}$ ஆ) $\omega^{-1}$

இ) $\omega^{n-k}$ ஈ) $\omega^{\frac{n}{k}}$.

6. $y = ax^3 + bx^2 + cx + d$ என்ற வளைவரைக்கு $x = 1$ இல் ஒரு வளைவு மாற்றுப்புள்ளி உண்டெனில்

அ) $a + b = 0$ ஆ) $a + 3b = 0$

இ) $3a + b = 0$ ஈ) $3a + b = 1$.

7. $\lim\limits_{x \to 0} \dfrac{x}{\tan x}$ இன் மதிப்பு

அ) 1 ஆ) $-1$

இ) 0 ஈ) $\infty$.

B

8. $u = \log \left[ \frac{x^2 + y^2}{xy} \right]$ எனில் $x \frac{\partial u}{\partial x} + y \frac{\partial u}{\partial y}$ என்பது

அ) $0$ ஆ) $u$

இ) $2u$ ஈ) $u^{-1}$.

9. $y^2 (a + 2x) = x^2 (3a - x)$ என்ற வளைவரையின் தொலைத் தொடுகோடு

அ) $x = 3a$

ஆ) $x = -\frac{a}{2}$

இ) $x = \frac{a}{2}$

ஈ) $x = 0$.

10. $x = 0$ விலிருந்து $x = \frac{\pi}{4}$ வரையிலான $y = \sin x$ மற்றும் $y = \cos x$ என்ற வளைவரைகளின் இடைப்பட்ட பரப்பு

அ) $\sqrt{2} + 1$ ஆ) $\sqrt{2} - 1$

இ) $2\sqrt{2} - 2$ ஈ) $2\sqrt{2} + 2$.

11. $i + i^{22} + i^{23} + i^{24} + i^{25}$ இன் மதிப்பு

அ) $i$

ஆ) $-i$

இ) $1$

ஈ) $-1$.

www.tnschools.co.in

12. $p$ ஆனது கலப்பு எண் மாறி $z$ ஐக் குறிக்கின்றது ; $| 2z - 1 | = 2 | z |$ எனில் $p$ இன் நியமப்பாதை

அ) $x = \frac{1}{4}$ என்ற நேர்க்கோடு

ஆ) $y = \frac{1}{4}$ என்ற நேர்க்கோடு

இ) $z = \frac{1}{2}$ என்ற நேர்க்கோடு

ஈ) $x^2 + y^2 - 4x - 1 = 0$ என்ற வட்டம்.

13. $\omega$ என்பது 1 (Unity) இன் முப்படி மூலம் எனில் $\left( 1 - \omega + \omega^2 \right)^4 + \left( 1 + \omega - \omega^2 \right)^4$ - இன் மதிப்பு

அ) 0 ஆ) 32

இ) $-16$ ஈ) $-32$.

14. ஒரு கலப்பெண்ணின் $n$ - ஆம் படி மூலங்களின் வீச்சுகளின் வித்தியாசம்

அ) $\frac{2\pi}{n}$ ஆ) $\frac{\pi}{n}$

இ) $\frac{3\pi}{n}$ ஈ) $\frac{4\pi}{n}$.

15. $\frac{x^2}{8} + \frac{y^2}{4} = 1$ என்ற நீள் வட்டத்தின் குற்றச்சின் முனைகள் $B, B'$ மற்றும் அதன் குவியங்கள் $F_1$, $F_2$ எனில் $F_1 BF_2 B'$ இன் பரப்பு

அ) 16 ஆ) 8

இ) $16\sqrt{2}$ ஈ) $32\sqrt{2}$.

B

www.tnschools.co.in

16. ஒரு சதுர அணி $A$ இன் வரிசை $n$ எனில் $|adj(A)|$ என்பது

அ) $|A|^2$

ஆ) $|A|^n$

இ) $|A|^{n-1}$

ஈ) $|A|$.

17. மதிப்பிட வேண்டிய மூன்று மாறிகளில் அமைந்த மூன்று நேரிய அசமபடித்தான சமன்பாட்டுத் தொகுப்பில் $\Delta = 0$ மற்றும் $\Delta_x = 0$, $\Delta_y \neq 0$, $\Delta_z = 0$ எனில், தொகுப்பானது

அ) ஒரே ஒரு தீர்வு பெற்றிருக்கும்

ஆ) இரண்டு தீர்வுகள் பெற்றிருக்கும்

இ) எண்ணிக்கையற்ற தீர்வுகள் பெற்றிருக்கும்

ஈ) தீர்வுகள் பெற்றிருக்காது.

18. $-2x + y + z = l$ ; $x - 2y + z = m$ ; $x + y - 2z = n$, என்ற சமன்பாடுகள் $l + m + n = 0$, எனுமாறு அமையுமாயின் அத்தொகுப்பு

அ) ஒரே ஒரு பூச்சியமற்ற தீர்வு பெற்றிருக்கும்

ஆ) வெளிப்படைத் தீர்வு பெற்றிருக்கும்

இ) எண்ணிக்கையற்ற தீர்வுகள் பெற்றிருக்கும்

ஈ) தீர்வுகள் பெற்றிருக்காது.

19. $\rho(A) = \rho(A, B) =$ மாறிகளின் எண்ணிக்கை எனில், தொகுப்பானது

அ) ஒருங்கமைவு உடையது மற்றும் எண்ணிக்கையற்ற தீர்வுகள் பெற்றுள்ளது

ஆ) ஒருங்கமைவு உடையது மற்றும் ஒரே ஒரு தீர்வு பெற்றுள்ளது

இ) ஒருங்கமைவு உடையது

ஈ) ஒருங்கமைவு அற்றது.

 www.tnschools.co.in

20. $\vec{u} = \vec{a} \times (\vec{b} \times \vec{c}) + \vec{b} \times (\vec{c} \times \vec{a}) + \vec{c} \times (\vec{a} \times \vec{b})$ எனில்

அ) $\vec{u}$ ஒரு ஓரலகு வெக்டர்  ஆ) $\vec{u} = \vec{a} + \vec{b} + \vec{c}$

இ) $\vec{u} = \vec{0}$  ஈ) $\vec{u} \neq \vec{0}$.

21. கீழ்க்கண்டவற்றில் எக்கணத்தில் ' + ' ஈருறுப்புச் செயலி அல்ல ?

அ) $N$  ஆ) $Z$

இ) $\mathbb{C}$  ஈ) $Q - \{0\}$.

22. $Var(4x + 3)$ இன் மதிப்பு

அ) 7  ஆ) 16 Var ( $X$ )

இ) 19  ஈ) 0.

23. ஒரு ஈருறுப்புப் பரவலின் சராசரி = 2. மேலும் பரவற்படி $\frac{4}{3}$ எனில் $p$ யின் மதிப்பு

அ) $\frac{2}{3}$  ஆ) $\frac{1}{3}$

இ) $\frac{3}{4}$  ஈ) $\frac{2}{\sqrt{3}}$.

24. ஒரு சமவாய்ப்பு மாறி $X$, இயல்நிலைப் பரவல் $f(x) = ce^{\frac{-\frac{1}{2}(x-100)^2}{25}}$ ஐ பின்பற்றுகிறது எனில் $c$ இன் மதிப்பு

அ) $\sqrt{2\pi}$  ஆ) $\frac{1}{\sqrt{2\pi}}$

இ) $5\sqrt{2\pi}$  ஈ) $\frac{1}{5\sqrt{2\pi}}$.

25 ஒரு பாய்ஸான் பரவலில் $P[X=2] = P[X=3]$ எனில் பண்பளவை $\lambda$ இன் மதிப்பு

அ) 6 ஆ) 2

இ) 3 ஈ) 0.

26. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள் வட்டத்திற்கும் அதன் துணை வட்டத்திற்கும் இடைப்பட்ட பரப்பு $(a > b)$

அ) $\pi b(a-b)$ ஆ) $2\pi a(a-b)$

இ) $\pi a(a-b)$ ஈ) $2\pi b(a-b)$.

27. $\int_0^\infty x^5 e^{-4x} dx =$

அ) $\frac{\lfloor 6}{4^6}$ ஆ) $\frac{\lfloor 6}{4^5}$

இ) $\frac{\lfloor 5}{4^6}$ ஈ) $\frac{\lfloor 5}{4^5}$.

28. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தின் பரப்பை நெட்டச்சு, குற்றச்சு இவற்றைப் பொறுத்து முறையே சுழற்றப்படும் திடப்பொருளின் கன அளவுகளின் விகிதம் $(a > b)$

அ) $b^2 : a^2$ ஆ) $a^2 : b^2$

இ) $a : b$ ஈ) $b : a$.

29. $y = ke^{\lambda x}$ எனில் அதன் வகைக்கெழுச் சமன்பாடு

அ) $\frac{dy}{dx} = \lambda y$ ஆ) $\frac{dy}{dx} = ky$

இ) $\frac{dy}{dx} + ky = 0$ ஈ) $\frac{dy}{dx} = e^{\lambda x}$.

www.tnschools.co.in



30. $x^2 \, dy + y(x+y)\, dx = 0$ என்ற சமப்படித்தான வகைக்கெழுச் சமன்பாட்டில் $y = vx$ எனப் பிரதியீடு செய்யும்போது கிடைப்பது

அ) $x dv + (2v + v^2)\, dx = 0$

ஆ) $v dx + (2x + x^2)\, dv = 0$

இ) $v^2 \, dx - (x + x^2)\, dv = 0$

ஈ) $v dv + (2x + x^2)\, dx = 0$.

31. செவ்வகலத்தின் நீளம், துணையச்சின் நீளத்தில் பாதி எனக் கொண்டுள்ள அதிபரவளையத்தின் மையத் தொலைத் தகவு

அ) $\frac{\sqrt{3}}{2}$

ஆ) $\frac{5}{3}$

இ) $\frac{3}{2}$

ஈ) $\frac{\sqrt{5}}{2}$.

32. $\frac{x^2}{36} - \frac{y^2}{4} = 1$ என்ற அதிபரவளையத்தின் மீது உள்ள $P$ இன் ஆயத் தொலைவுக்கோடு, தொலைத் தொடுகோடுகளை $Q$ மற்றும் $Q'$ இல் சந்திக்கின்றன எனில் $QP \cdot Q'P$ இன் மதிப்பு

அ) 36

ஆ) 6

இ) 4

ஈ) 2.

33. $\frac{x^2}{9} + \frac{y^2}{4} = 1$ இன் நெட்டச்சு மற்றும் குற்றச்சின் சமன்பாடுகள் முறையே

அ) $x = 3, \; y = 2$

ஆ) $x = -3, \; y = -2$

இ) $x = 0, \; y = 0$

ஈ) $y = 0, \; x = 0$.

www.tnschools.co.in

34. ஒரு கோளத்தின் கன அளவு மற்றும் ஆரத்தில் ஏற்படும் மாறு வீதங்கள் எண்ணளவில் சமமாக இருக்கும்போது கோளத்தின் வளைபரப்பு

அ) 1 ஆ) $\frac{1}{2\pi}$

இ) $4\pi$ ஈ) $\frac{4\pi}{3}$.

35. $y^2 = x$ மற்றும் $x^2 = y$ என்ற பரவளையங்களுக்கிடையே ஆதியில் அமையும் கோணம்

அ) $2 \tan^{-1}\left(\frac{3}{4}\right)$

ஆ) $\tan^{-1}\left(\frac{4}{3}\right)$

இ) $\frac{\pi}{2}$

ஈ) $\frac{\pi}{4}$.

36. $\left|\vec{a} + \vec{b}\right| = \left|\vec{a} - \vec{b}\right|$ எனில்

அ) $\vec{a}$ ம் $\vec{b}$ ம் இணையாகும் ஆ) $\vec{a}$ ம் $\vec{b}$ ம் செங்குத்தாகும்

இ) $\left|\vec{a}\right| = \left|\vec{b}\right|$ ஈ) $\vec{a}$ மற்றும் $\vec{b}$ ஓரலகு வெக்டர்கள்.

37. $\vec{OQ}$ என்ற அலகு வெக்டர் மீதான $\vec{OP}$ இன் வீழலானது $OPRQ$ என்ற இணைகரத்தின் பரப்பை போன்று மும்மடங்காயின் $\angle POQ$ ஆனது

அ) $\tan^{-1}\left(\frac{1}{3}\right)$

ஆ) $\cos^{-1}\left(\frac{3}{\sqrt{10}}\right)$

இ) $\sin^{-1}\left(\frac{3}{\sqrt{10}}\right)$

ஈ) $\sin^{-1}\left(\frac{1}{3}\right)$.

www.tnschools.co.in



38. $\frac{x-1}{2} = \frac{y-1}{-1} = \frac{z}{1}$ மற்றும் $\frac{x-2}{3} = \frac{y-1}{-5} = \frac{z-1}{2}$

ஆகிய இரு கோடுகளும்

அ) இணை

ஆ) வெட்டிக்கொள்பவை

இ) ஒரு தளம் அமையாதவை

ஈ) செங்குத்து.

39. Z அச்சின் மீது $\vec{i} - \vec{j}$ இன் வீழல்

அ) 0

ஆ) 1

இ) $-1$

ஈ) $\infty$.

40. $2x - y + 2z = 5$ என்ற தளத்தின் செங்குத்து அலகு வெக்டர்கள்

அ) $2\vec{i} - \vec{j} + 2\vec{k}$

ஆ) $\frac{1}{3}\left(2\vec{i} - \vec{j} + 2\vec{k}\right)$

இ) $-\frac{1}{3}\left(2\vec{i} - \vec{j} + 2\vec{k}\right)$

ஈ) $\pm\frac{1}{3}\left(2\vec{i} - \vec{j} + 2\vec{k}\right)$.

B

www.tnschools.co.in



## பிரிவு - ஆ

*குறிப்பு :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) வினா **55** க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். பிற வினாக்களிலிருந்து ஏதேனும் 9 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் *ஆறு* மதிப்பெண்கள். $10 \times 6 = 60$

41. $A = \begin{bmatrix} 5 & 2 \\ 7 & 3 \end{bmatrix}$ மற்றும் $B = \begin{bmatrix} 2 & -1 \\ -1 & 1 \end{bmatrix}$ எனில் $(AB)^{-1} = B^{-1}A^{-1}$ ஐ சரிபார்க்க.

42. அணிக்கோவை முறையில் பின்வரும் சமன்பாடுகளின் தொகுப்பினைத் தீர்க்க :

$2x + 3y = 8, \; 4x + 6y = 16.$

43. $(3, -1, -1)$, $(1, 0, -1)$ மற்றும் $(5, -2, -1)$ என்ற புள்ளிகள் ஒரு கோட்டமைப் புள்ளிகள் எனக் காட்டுக.

44. $2\vec{i} - \vec{j} + 3\vec{k}$ எனும் நிலை வெக்டரை உடைய புள்ளியை மையமாகவும் 4 அலகுகளை ஆரமாகவும் கொண்ட கோளத்தின் வெக்டர் மற்றும் கார்ட்டீசியன் சமன்பாடுகளைக் காண்க.

45. $1 + i$ ஐ ஒரு தீர்வாகக் கொண்ட $x^4 + 4 = 0$ எனும் சமன்பாட்டின் தீர்வுகளைக் காண்க.

46. செவ்வக அதிபரவளையத்தின் ஏதேனும் ஒரு புள்ளியிடத்து வரையப்படும் தொடுகோடு, தொலைத் தொடுகோடுகளுடன் அமைக்கும் முக்கோணத்தின் பரப்பு ஒரு மாறிலி என நிறுவுக.

47. $f(x) = x^3 - 3x^2 + 1, \; -\frac{1}{2} \le x \le 4$ என்ற சார்பின் மீப்பெரு பெருமம் மற்றும் மீச்சிறு சிறும மதிப்புகளைக் காண்க.

48. $f(x) = x^3 - 5x^2 - 3x, \; [1, 3]$ என்ற சார்புக்கு லாக்ராஞ்சியின் இடைமதிப்பு விதியினை சரிபார்க்கவும்.

www.tnschools.co.in



49. வகையீடுகளைப் பயன்படுத்தி $\sqrt[3]{65}$ க்கு தோராய மதிப்பைக் காண்க.

50. $y = 2x + 4$ என்ற கோடு $y = 1$, $y = 3$ என்ற கோடுகள் மற்றும் $y$ - அச்சு ஆகியவற்றால் அடைபடும் அரங்கத்தின் பரப்பினைக் காண்க.

51. தீர்க்க: $x^2 \frac{dy}{dx} = y^2 + 2xy$ ; $x = 1$ எனில் $y = 1$

52. அ) $(p \vee q) \wedge (\sim q)$ என்ற கூற்றுக்கு மெய் அட்டவணை அமைக்க.

ஆ) $p \wedge (\sim p)$ ஒரு முரண்பாடு என நிரூபி.

53. $(p \wedge q) \rightarrow (p \vee q)$ என்பது ஒரு மெய்மை எனக் காட்டுக.

54. அ) ஒரு ஈருறுப்புப் பரவலின் சராசரி மற்றும் பரவற்படியின் வித்தியாசம் 1 ஆகும். மேலும் அவற்றின் வர்க்கங்களின் வித்தியாசம் 11 எனில் $n$ இன் மதிப்பு காண்க.

ஆ) பாய்ஸான் பரவலை பயன்படுத்தி, நிகழ்தகவின் கூடுதல் ஒன்று என நிறுவுக.

55. அ) ஒரு பள்ளியின் 800 மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறனாய்வுத் தேர்வின் மதிப்பெண்கள் இயல்நிலைப் பரவலை ஒத்திருக்கிறது. 10% மாணவர்கள் 40 மதிப்பெண்களுக்குக் குறைவாகவும் 10% மாணவர்கள் 90 மதிப்பெண்களுக்கு கூடுதலாகவும் பெறுகிறார்கள். 40 மதிப்பெண்களுக்கும் 90 மதிப்பெண்களுக்கும் இடையே மதிப்பெண் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

*அல்லது*

ஆ) $\cos\alpha + \cos\beta + \cos\gamma = 0 = \sin\alpha + \sin\beta + \sin\gamma$, எனில், $\cos 2\alpha + \cos 2\beta + \cos 2\gamma = 0$ மற்றும் $\sin 2\alpha + \sin 2\beta + \sin 2\gamma = 0$ எனக் காட்டுக.

www.tnschools.co.in



## பிரிவு - இ

*குறிப்பு :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) வினா **70** - க்கு கண்டிப்பாக விடையளிக்கவும் பிற வினாக்களிலிருந்து ஏதேனும் 9 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் மதிப்பெண் 10. $10 \times 10 = 100$

**56.** $\lambda$ - இன் எல்லா மதிப்புகளுக்கும் பின்வரும் சமன்பாட்டுத் தொகுப்பின் தீர்வுகளை தரத்தினைப் பயன்படுத்தி ஆராய்க :

$x + y + z = 2,\ 2x + y - 2z = 2,\ \lambda x + y + 4z = 2.$

**57.** $(-1,\ -2,\ 1)$ என்ற புள்ளி வழிச் செல்வதும் $x + 2y + 4z + 7 = 0$ மற்றும் $2x - y + 3z + 3 = 0$ ஆகிய தளங்களுக்குச் செங்குத்தாகவும் உள்ள தளத்தின் வெக்டர் மற்றும் கார்டீசியன் சமன்பாடுகளைக் காண்க.

**58.** $x^9 + x^5 - x^4 - 1 = 0$. என்ற சமன்பாட்டினைத் தீர்க்க.

**59.** $36x^2 + 4y^2 - 72x + 32y - 44 = 0$ என்ற நீள்வட்டத்தின், மையத் தொலைத்தகவு, மையம், குவியங்கள், முனைகள் ஆகியவற்றைக் காண்க. மேலும் அதன் வரைபடத்தினை வரைக.

**60.** ஒரு தொங்கு பாலத்தின் கம்பி வடம் பரவளைய வடிவிலுள்ளது. அதன் (Span) நீளம் 40 மீ. ஆகும். வழிப்பாதையானது கம்பி வடத்தின் கீழ்மட்டப் புள்ளியிலிருந்து 5 மீ கீழே உள்ளது. கம்பி வடத்தைத் தாங்கும் தூண்களின் உயரங்கள் 55 மீ எனில், 30 மீ உயரத்தில் கம்பி வடத்திற்கு ஒரு துணை தாங்கு கூடுதலாகக் கொடுக்கப்பட்டால் அத்துணைத் தாங்கியின் நீளத்தைக் காண்க.

www.tnschools.co.in



61. $'a'$ அலகு ஆரமுள்ள கோளத்தினுள் பெரும அளவு கொள்ளுமாறு காணப்படும் கூம்பின் கொள்ளளவு, கோளத்தின் கொள்ளளவின் $\frac{8}{27}$ மடங்கு எனக் காட்டுக.

62. $f(x) = x^4 - 6x^2$ என்ற சார்பு எந்த இடைவெளிகளில் குழிவு அடைகிறது என்பதையும் மற்றும் வளைவு மாற்றுப் புள்ளிகளையும் காண்க.

63. $f(x, y) = \frac{1}{\sqrt{x^2 + y^2}}$ என்ற சார்புக்கு யூலரின் தேற்றத்தைச் சரிபார்க்க.

64. மதிப்பிடுக : $\int_{\pi/6}^{\pi/3} \frac{dx}{1 + \sqrt{\cot x}}$ .

65. ஆரம் $'a'$ உடைய வட்டத்தின் சுற்றளவை தொகையீட்டு முறையில் காண்க.

66. நுண்ணுயிர்களின் பெருக்கத்தில், பாக்டீரியாவின் பெருக்க வீதமானது அதில் காணப்படும் பாக்டீரியாவின் எண்ணிக்கைக்கு விகிதமாக அமைந்துள்ளது. இப்பெருக்கத்தால் பாக்டீரியாவின் எண்ணிக்கை 1 மணி நேரத்தில், மும்மடங்காகிறது எனில் ஐந்து மணி நேர முடிவில் பாக்டீரியாவின் எண்ணிக்கை ஆரம்ப நிலையைக் காட்டிலும் $3^5$ மடங்காகும் எனக் காட்டுக.

67. தீர்க்க: $\frac{d^2y}{dx^2} - 3\frac{dy}{dx} + 2y = 2e^{3x}$. இங்கு $x = \log 2$, எனில் $x = 0$ மற்றும் $y = 0$, எனில் $y = 0$.

68. மிகை விகிதமுறு எண்களின் கணம் $G$ என்பது $a * b = \frac{ab}{3} \forall a, b \in G$, எனுமாறு வரையறுக்கப்பட்ட செயலி $*$ இன் கீழ் ஒரு குலத்தை அமைக்கும் எனக் காட்டுக.

www.tnschools.co.in



69. ஒரு நகரத்தில் வாடகை வண்டி ஓட்டுனர்களால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை பாய்ஸான் பரவலை ஒத்திருக்கிறது. இதன் சராசரி 3 எனில், 1000 ஓட்டுநர்களில் (i) ஒரு வருடத்தில் ஒரு விபத்தும் ஏற்படாமல் (ii) ஒரு வருடத்தில் மூன்று விபத்துகளுக்கு மேல் ஏற்படுத்தும் ஓட்டுனர்களின் எண்ணிக்கையைக் காண்க $[ e^{-3} = 0{\cdot}0498 ]$.

70. அ) புள்ளி (2, 0) வழியாகச் செல்லும் ஒரு அதிபர வளையத்தின் மையம் (2, 4) ஆகும். இதன் தொலைத் தொடுகோடுகள், $x + 2y - 12 = 0$ மற்றும் $x - 2y + 8 = 0$ ஆகிய நேர்க்கோடுகளுக்கு இணையாக இருப்பின், அதிபரவளையத்தின் சமன்பாடு காண்க.

*அல்லது*

ஆ) $\frac{x-1}{1} = \frac{y+1}{-1} = \frac{z}{3}$ மற்றும் $\frac{x-2}{1} = \frac{y-1}{2} = \frac{-z-1}{1}$ ஆகிய கோடுகள் வெட்டிக்கொள்ளும் என நிரூபித்து, அதன் வெட்டுப்புள்ளியினைக் காண்க.